DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.I, CHIDAMBARAM.
**Present:Ms.Ba.Dhaarani, B.S.L., L.L.B., D.T.L.,**
**Judicial Magistrate No.I., Chidambaram.**

| | |
|---|---|
| Case No. | STC.No. 144/2022 |
| Deposition of Witness for Complainant | PW: 1 |
| Name: | திரு. முத்துராமன் |
| Father's /Husband Name: | த.பெ. கிருஷ்ணமூர்த்தி |
| Village: | சேத்தியாதோப்பு |
| Taluk: | |
| Caste | |
| Calling: | |
| Religion: | |
| Age: | |
| **Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 23.06.2023.** | |

Accused present.

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு செய்யப்படும் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) எதிரியை எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு எதிரியை தெரியும். எதிரியை எத்தனை வருடங்களாக எனக்கு தெரியும் என்றால் 2021 லிருந்து 10 மாதங்களாக தெரியும். எதிரி என்ன வேலை பார்த்தார் என்றால் சத்துணவு பொறுப்பாளர் வேலை பார்த்தார். எதிரியின் சொந்த ஊர் என்ன என்றால் சின்னகோட்டிமலை. எதிரியின் கணவர் பெயர் என்ன என்றால் கலைச்செல்வன். எதிரியின் வீடு விலாசம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் கணவர் கம்மாபுரத்தில் ஓட்டல் கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் நான் பூக்கடை வைத்துள்ளேன். பூக்கடையில் எனக்கு என்ன வருமானம் வரும் என்றால் ஒரு நாளைக்கு ரூ.600/- லிருந்து ரூ.700/- வரை சம்பாதிப்பேன். நான் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லிதான் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். எதிரிக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியதும் நான் சொல்லியபடி தான் அனுப்பப்பட்டது என்றால் சரிதான்.

2) நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் இந்தியன் ஓவர் சீஸ் பேங்க் அச்சலாபுரம் கிளை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் கம்மாபுரம் கிளை என்று தான் குறிப்பிட்டுள்ளேன். நான் எதிரிக்கு ரூ. 3 லட்சம் பணம் எவ்வாறு கொடுத்தேன் என்றால் நான் நகையை அடமானம் வைத்து அந்த தொகையை எதிரிக்கு கடனாக கொடுத்தேன். நான் மேற்படி நகையை அடமானம் வைத்து கொடுத்ததாக என்னுடைய புகாரிலோ வழக்கறிஞர் அறிவிப்பிலோ பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது வழக்கறிஞர் அறிவிப்பில் ரூ.3 லட்சத்தை நண்பர்களிடம் இருந்து கடனாக வாங்கி வைத்திருந்ததை எதிரிக்கு கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் நகையை வைத்து குறைந்த தொகைக்கு நான் நண்பர்களிடம் வாங்கிக்கொடுத்தேன். நான் எதிரிக்கு கொடுத்த பணத்தை முழுவதுமாக கொடுத்தேனா அல்லது பகுதி பகுதியாக கொடுத்தேனா என்றால் முழு தொகையாகத்தான் கொடுத்தேன். நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.3 லட்சத்தொகைக்கு பத்திரத்திலோ, பிராமிசரி நோட்டிலோ எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. மேற்படி ரூ. 3 லட்சத்தை சாட்சியாக வைத்து யார் முன்னிலையிலாவது கொடுத்தேனா என்றால் மகாலிங்கம் என்பவர் முன்னிலையில் கொடுத்தேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி மகாலிங்கம் என்பவரின் பெயரை குறிப்பிட்டுள்ளேயனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு ரூ. 3 லட்சத்தை 2000 தாளில் கொடுத்தேனா அல்லது எந்த ரூபாய் தாளில் கொடுத்தேன் என்றால் 600, ஐந்நூறு ரூபாய் தாளாக கொடுத்தேன். 04.01.2022 அன்று காசோலை பவுன்ஸ் ஆனவுடன் எதிரியிடம் சென்-று பணத்தை திருப்பி தருமாறு கேட்டேனா என்றால் கேட்டேன். எந்த தேதியில் கேட்டேன் என்றால் 04.01.2022 அன்று எதிரியிடம் சென்று பணத்தைதிருப்பித்தருமாறு கேட்டேன். மேற்படி விவரத்தை நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். காசோலை திருப்பப்பட்டதிலிருந்து 22 நாட்கள் கழித்துதான் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான்.

3) என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் எதிரி கணக்கு வைத்துள்து என இந்தியன் ஓவர் சீஸ் பேங்க் கம்மாபுரம் கிளை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிரி என்னிடம் காசோலை கொடுத்தபோது அந்த காசோலை அவர் கைப்படவே பூர்த்தி செய்யப்பட்டு கொடுக்கப்பட்டதா என்றால் காசோலையில் உள்ள தொகை மற்றும் கையொப்பம் எதிரி போட்டுக்கொடுத்தார். வேறு எதுவும் எதிரி அந்த காசோலையில் எழுதிக்கொடுக்கவில்லை. நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரியின் கணவர் என் நண்பர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி எதிரியின் கணவரை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் கடந்த 1 1/2 வருடங்களாக எனக்கு தெரியும். எதிரி என்னிடம் காசோலையை எங்கு வைத்து கொடுத்தார்கள் என்றால் அக்னீஷ்வரி

சிட்பண்ட்சில் வைத்து என்னிடம் காசோலையை கொடுத்தார். நான் எந்த தேதியில் மேற்படி தொகையை எதிரியிடம் கொடுத்தேன் என்றால் 2021-ம் வருடம் 7-ம் மாதம் ரூ.3 லட்சத்தை எதிரியிடம் கொடுத்தேன். மேற்படி அக்னீஷ்வரி சிட்பண்ட்சில் வைத்து எதிரி என்னிடம் காசோலையை கொடுத்ததாக நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் புகாரிலும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

4) நான் எதிரியின் மீது ஒரு பொய்யான வழக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றாலும் எதிரிக்கு என்னை யார் என்று தெரியாது என்றாலும் எதிரி எனக்கு எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. அக்னீஷ்வரி சிட்பண்ட்சில் இருப்பவர்கள் என்னிடம் இந்த வழக்கு காசோலையை கொடுத்தபின்புதான் நான் எதிரியின் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open Court in the presence of the accused read over of the witness and Admitted by him/her to by correct.

(Sd/- Ms.Ba.Dhaarani)
J.M.No.I, Chidambaram